05.02.2026 Mcop 59/2021 எ.ம.சா 1 செண்பகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி ஞாபகமில்லை. விபத்து அன்று என்னுடைய வாகனம் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றது என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் என்னிடம் வேலை பார்த்த நபர் ஆவார். விபத்து நடந்த போது ஆட்டோவை ஓட்டிய நபர் யார் என்று தெரியும். ஆட்டோவில் நிறைய ஆட்களை ஏற்றி சென்றதாக கேள்விபட்டேன். ஆட்டோவை மனுதாரர் முப்புடாதி தான் ஓட்டி சென்றதாக முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சரியா என்றால் ஆட்டோவை அந்த ஓட்டுனர் ஓட்டினார். அவர் பெயர் தெரியவில்லை. எனக்கு சொந்தமான வாகனத்தில் விபத்து தேதியில் லோடு கொண்டு செல்லப்பட்டதா என்றால் லோடு ஏற்றவில்லை. நான் சொல்வது தவறு என்றும், லோடு ஏற்றவில்லை என பொய்யாக சொல்லுகிறன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 1 ம் எதிர்மனுதாரர் சுப்பிரமணியன் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆட்டோ ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நானும், காப்பீடு நிறுவனமும் தான் மனுதாருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.